

முன்னாள் சபாநாயகர் சேடபட்டி இரா.முத்தையா அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு திருமங்கலம் அருகில் உள்ள முத்தப்பன்பட்டியில் அமைந்திருக்கும் அன்னாரின் நினைவிடத்தில் சபரீசன் அவர்கள் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்திய போது எடுத்த படம். உடன் மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், பாரதி மணிமாறன் மற்றும் கழகத்தினர், குடும்பத்தினர், பொதுமக்கள் உள்ளனர்.



திருச்சி கரூர் சாலையில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் 21.09. 2024 சனிக்கிழமை, நடைபெற்ற "திராவிடப்பள்ளி 5ஆம் ஆண்டு தொடக்க விழாவில் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றி, திராவிடப் பள்ளி நான்காம் ஆண்டுத் தேர்வில் சிறப்பாக வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்! இந்நிகழ்வில் அமைச்சரும், கழக முதன்மை செயலாளருமான கே.என். நேரு, அரசு கொறடா கோவி செழியன், திராவிடப்பள்ளி நிறுவனர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், மாவட்ட கழகச் செயலாளர்கள் தியாகராஜன், வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், என்.ஆர்.ஐ.ஏ.எஸ். அகாடமி நிறுவனர் விஜயாலயன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி சிறப்புரை!

# கும்பகோணம் மாநகரக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### செ.இராமலிங்கம், முனைவர் கோவி.செழியன், சு.ப.தமிழழகன் பங்கேற்பு!

தஞ்சாவூர் செப்.23-

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகரத் தி.மு.க சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம், கும்ப கோணத்தில் மாநகர அவைத்தலைவர் எஸ்.வாசுதேவன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநகரக் கழகச் செயலாளரும், துணை மேயருமான சு.ப.தமிழழகன் வரவேற்புரையாற்றினார்.

மாநகரக் கழக நிர்வாகிகள் ப்ரியம் ஜெ. சசிதரன், எம்.சிவானந்தம், டி.செந்தாமரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் செ.இராம லிங்கம், அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்.

இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.அசோக்குமார், எல்.இராஜேந்திரன், பகுதிக் கழகச் செயலாளர்கள் இரா.செல்வராஜ், இரா. கல்யாணசுந்தரம், டி.வி. கிருஷ்ணமூர்த்தி, மு.கண்ணன், மண்டலக்குழு தலைவர்கள் கே.என்.எஸ்.ஆசை தம்பி, ஜெ.மனோகரன், பாபு இரா.நரசிம்மன், நிலைக்குழு தலைவர்கள் ச.பார்த்திபன், டி.ஆர். அனந்தராமன், ஆர்.முருகன், அ.சாகுல்ஹமீது, மாவட்ட பிரதிநிதிகள் கோ.ஆர்.கோவிந்தராஜன், கே.ரமேஷ்குமார், ப.மனோகரன், எஸ்.சிவசாமி, டி.ரமேஷ்,இரா.அன்பழகன், ஆர்.ராஜேஸ்குமார் அ.மகபூப்பாட்சா, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் க.செந்தில்குமார், சா.கணேசன், கே.கே.எஸ்.ராஜா, வி. சிவக்குமார், ஐ.டி.விங் மாவட்ட துணை அமைப்பாளர் பி.காளிதாஸ், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் அ.வெங்கடேசன் உள்ளிட்ட வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள், மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்துக்கொண்டனர்.ஷ

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு :

மாறும் காலத்திற்கேற்பவும், சமூக மாற்றத்திற்கேற்பவும் மெருகேற்றிக்கொள்ளும் மக்கள் இயக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முப்பெரும் விழாவில், இனமானம், மொழிமானம், சுயமரியாதையை கண் போல் காக்கும் திராவிடச் செம்மல், முன்மாதிரி முதல்வரின் கடமை உணர்வைக் கண்டு வாழ்த்துகிறேன்! பாராட்டுகிறேன்!! என்று 'AI தொழில்நுட்பத்தில்' நிறைந்து வாழும் தலைவர் கலைஞர் அவர்கள் உரையாற்றுவது போன்று கழக முப்பெரும் விழாவில் அமைந்திருந்தது உடன்பிறப்புகளை எல்லாம் மெய்சிலிர்க்க வைத்தது. நன்றிகள்.!!!

"எல்லா அதிகாரமும்" கொண்டவைகளாக மாநில அரசுகளை மாற்றும் வகையில் அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர முயற்சிக்கும் சட்ட முன்னெடுப்புகளை திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொள்ளும் என்றும், பவள விழா காணும் நம் இயக்கம் தொடர் வெற்றிகளின் மூலம் நூற்றாண்டு விழாவையும் கொண்டாடுவது என்றும் 17.09.2024இல் சென்னை YMCAவில் நடைபெற்ற கழக முப்பெரும் விழா பவள விழா நிறைவு நிகழ்ச்சியில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எழுச்சி உரையாற்றினார்கள். அவர்கள் குறிப்பிடும் அந்த தொடர் வெற்றியின் வரிசையில் வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் தலைவர் அவர்களின் எண்ணங்களுக்கு ஏற்ப மாபெரும் வெற்றியை பெற ஏதுவாக நாமும் நமது மாநகரத்தில் அதற்கான பணிகளை முன்னெடுத்து முழுவீச்சில் பணியாற்றி கும்பகோணம் சட்டமன்றத் தொகுதியின் தொடர் வெற்றிக்கு பாடுபட வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் என்ற பொருளாதார இலக்கினை நிர்ணயித்து, அதனை அடைதவற்காக உலகப் புகழ்பெற்ற பொருளாதார வல்லுநர் குழுவினை உருவாக்கி, நமது மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை மேம்படுத்திட கடந்த மூன்றாண்டுகளாக அயராது பாடுபட்டு வரும் நம் திராவிட மாடல் அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திறன்மிகு முயற்சிகளால் பன்னாட்டு முதலீட்டாளர்களின் முதல் முகவரியாகத் தமிழ்நாடு திகழ்கிறது. ஆசிய நாடுகளின் நுழைவாயிலாக சென்னை அமைந்துள்ள நிலையில், தமிழ்நாட்டில் ஏறத்தாழ 39 ஆயிரம் தொழிற்சாலைகளும், அதில் பணியாற்றக்கூடிய 2.6 மில்லியன் அளவிற்குப் பணியாளர்களும் இருப்பதால், தாய்த் தமிழ்நாட்டின் வளர்ச்சியை மேலும் மேலும் அதிகரிக்க வேண்டும், தமிழர்களின் வாழ்வு உயர்ந்திட வேண்டும் என்ற இலக்குடன் அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டு, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு அதிகமாக உள்ளதையும் கூறி, அமெரிக்க நிறு வனத்தினர் தமிழ்நாட்டில் தாராளமாக முதலீடு செய்ய முன்வரவேண்டும் என்பதையும், அவர்களுக்குத் தேவைப்படும் கட்டமைப்புகளைத் தமிழ்நாடு அரசு நிறைவேற்றித் தரும் என்ற உறுதியையும் வழங்கி, சான்பிரான்சிஸ்கோவில் 8 நிறுவனங்களுடனும், சிகாகோவில் 11 நிறுவனங்களுடனும் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளது. இந்த 19 ஒப்பந்தங்களின் மூலமாக ரூ.7616 கோடி முதலீடுகளை ஈர்த்து, 11,516 பேருக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்க செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கிறது.

உலகே தமிழ்நாட்டை திரும்பி பார்க்கும் வகையில் ஃபார்முலா 4 கார் பந்தயத்தை போக்குவரத்துக்கு எவ்வித இடையூறுமில்லால், அனைத்து தரப்பினராலும் பாராட்டும்படி சென்னையில் சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்திய கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவிக்கிறது.

கழக இளைஞர் அணி செயலாளராக பொறுப்பேற்று "இல்லந்தோறும் இளைஞர் அணி" என்ற முன்னெடுப்பில், இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கையை தமிழ்நாடு முழுவதும் மேற்கொள்ள செய்து 30 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களை இணைத்தும், சேலத்தில் இரண்டாவது இளைஞர் அணி மாநில மாநாட்டை திறம்பட நடத்தியும், முரசொலி பாசறைப் பக்கம், முத்தமிழறிஞர் பதிப்பகம், தொகுதிதோறும் கலைஞர் நூலகம் என் புதிய முயற்சிகள் மேற்கொண்டு கழகத்திற்கு வலுசேர்க்க செய்தும்,

2022 ஆம் ஆண்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் ஆக பொறுப்பேற்று மிகச் சிறப்பாக பணியாற்றி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அயராது உழைத்து இந்தியா கூட்டணி 40/40 தொகுதிகளில் வெற்றி பெறுவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்த, அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய, கழக மாநில இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாட்டின் துணை முதல்வர் பொறுப்பு வழங்க, கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1962ம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத் தேர்தலில் தஞ்சை தொகுதியில் போட்டியிட்ட போது பள்ளிச் சிறுவனாக உதயசூரியனுக்கு வாக்குகள் கேட்டு பரப்புரை மேற்கொண்டதில் தொடங்கி மாணவர் தி.மு.கவில் இணைந்து கழக மாணவர் அணி, விவசாய அணிகளில் பணியாற்றி தொடர்ந்து பல்வேறு பொறுப்புகள் பெற்று மாவட்ட கழகச் செயலாளராகவும், ஆறு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், 9 ஆண்டுகள் ஒன்றிய அமைச்சராகவும் இருந்து பணியாற்றிய கழக உயர் நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் ச.சு.பழநிமாணிக்கம் அவர்களுக்கு கழக முப்பெரும் விழாவில் "மு.க.ஸ்டாலின் விருது" விருது வழங்கி கழகத் தலைவர் அவர்கள் பாராட்டி கௌரவித்தார்கள்.

பெருமதிப்பிற்குரிய ச.சு.பழனிமாணிக்கம் அவர்களுக்கு இக்கூட்டம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது. அதே போல் 1989ல் இளைஞர் அணியில் சேர்ந்து ,நகர மாணவர் அணி துணை அமைப்பாளராகவும் , வட்ட கழக பிரதிநிதியாகவும், வட்ட கழக செயலாளராகவும், தற்போது கும்பகோணம் மாநகரத்தில் 1வது பகுதி கழக செயலாளராக பணியாற்றி வரும் இரா.செல்வராஜ் அவர்கள் பகுதி செயலாளருக்கான நற்சான்று விருது பெற்றமைக்கு இக்கூட்டம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

தலைமைக் கழக அறிவுறுத்தலுக்கிணங்க மாவட்ட கழகத் தீர்மானத்தின் படி கும்பகோணம் மாநகரில் 48 வட்டங்களிலும் வார்டு நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA2, BLCக்கள் மற்றும் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் ஆகியோரை ஒருங்கிணைத்து பொது உறுப்பினர்கள் கூட்டம் நடத்தி மினிட் புத்தகத்தில் பதிவு செய்து பகுதி கழக செயலாளர்கள் வழியாக மாநகரக் கழகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

ஒன்றிய அரசின் 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' எனும் முன்மொழிவு நடைமுறைக்கு சாத்தியமற்றது.

இந்தியாவின் பரந்துபட்ட தேர்தல் முறையில் சிக்கல்களை கவனித்துக் கொள்ளாததும், கூட்டாட்சியியலைச் சிதைப்பதும் ஆகும். வெவ்வேறு மாநிலங்களில் வெவ்வேறு காலங்களில் தேர்தல் நடப்பது அந்த மாநிலத்திற்குரிய பிரச்சினைகள் ஆட்சி முன்னுரிமைகள் உள்ளிட்ட காரணங்களால் ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறைக்கு ஒவ்வாதது என கழக தலைவர் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் ஜனநாயகத்தை ஒரு கட்சியின் பேராசைக்கு ஏற்ப வளைக்க நினைக்கும் ஒன்றிய பாஜக அரசை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

"மாணவர்களை சுயமாக சிந்திக்க வைக்கும் கல்விதான் சிறந்த கல்வி. அந்த வகையில் பார்த்தால், இந்தியாவிலேயே தமிழகத்தின் கல்விதான் சிறந்த கல்வி." 'சந்திரயான் 3' திட்டம் உலகமே வியக்கும் அளவுக்கு பெருமை சேர்த்தது. வீரமுத்துவேல் என்பவர் இந்தத் திட்டத்தின் இயக்குநராக இருந்தவர். அவர் தமிழ்வழி கல்வி கற்றவர். அரசுப் பள்ளியில் பயின்றவர்.

இவர் மட்டுமல்ல இந்திய விண்வெளி ஆராய்ச்சி மைய முன்னாள் தலைவர் சிவன், அதேபோல் இயக்குநராக இருந்த மயில்சாமி அண்ணாதுரை, தற்போதுள்ள வனிதா, நிகர் ஷாஜி, நாராயணன், ராஜராஜன், சங்கரன் உள்ளிட்ட விஞ்ஞானிகளில் 90 சதவீதம் பேர் தமிழ்வழியில் பயின்றவர்கள், இவர்கள்தான் உலகின் தலைசிறந்த விஞ்ஞானிகள் பட்டியலில் உள்ளனர்.

தமிழ்நாட்டு பாடத்திட்டத்தை படித்த பலர் உலக நாடுகளில் பல்வேறு துறைகளில் சாதனையாளராக உள்ளனர்.

இவற்றை எல்லாம் தெரிந்து கொள்ளாமல் அல்லது தெரிந்தும் தெரியாதது போல் தொடர்ந்து தமிழ்நாட்டு பாடத்திட்டத்தை குறைகூறி, ஒன்றிய அரசின் புதிய கல்வி கொள்கைக்கு பி.ஆர்.ஓ போல் செயல்படும் ஆளுநர் ரவி அவர்களுக்கு இக்கூட்டம் தனது கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறது.

கூட்ட நிறைவில் மாநகரக் கழக பொருளாளர் எஸ்.இரவிச்சந்திரன் நன்றியுரையாற்றினார்.



தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதியில் பொது உறுப்பினர் கூட்டம் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தலைமையில் வடக்கு ஆத்தூர் வீரபாகு திருமண மண்டபத்தில் வைத்து சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டேவிட் செல்வின்,மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர்,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம்,ஆழ்வை கிழக்கு ஒன்றிய செயலாளர் A.P.சதிஸ்குமார்,தூத்துக்குடி மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அ.பிரம்மசக்தி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சர் கோப்பை –

# அரசு நிறுவனங்களுக்கு இடையேயான கேரம் போட்டி!

### மின்கழகத் தொமுச பொதுச்செயலாளர் பா.மணிமாறன் இணையர் வெற்றி

சென்னை, செப்.23-

அரசு நிறுவனங்களுக்கிடையே நடைபெற்ற முதலமைச்சர் கோப்பைக்கான கேரம் விளையாட்டு போட்டியில், சென்னை மாவட்டத்தில் மின்சார வாரியத்தின் சார்பாக மின்கழகத் தொமுச பொதுச்செயலாளர் பா. மணிமாறன் இரட்டையர் பிரிவில் வெற்றி பெற்று முதல் இடத்தை பிடித்தார்கள்.

சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் 21.09.2024 அரசு நிறுவனங்களுக்கிடையான கேரம் விளையாட்டு போட்டி நடைபெற்றது.

இதில் சென்னை மாவட்டத்தில் அனைத்து அரசு நிறுவனங்களுக்கிடையே நடைபெற்ற கேரம் விளையாட்டு போட்டியில் மின்சார வாரியத்தின் சார்பாக கலந்துகொண்ட மின் கழகத் தொமுச பொதுச் செயலாளர் பா. மணிமாறன், ரா. தனசேகரன், திட்ட துணைச் செயலாளர்/ சென்னை தெற்கு 1, மின் கழகத் தொமுச இணையர், இரட்டையர் பிரிவில் வெற்றி பெற்று முதலிடம் பிடித்தார்கள்.

சென்னை மாவட்டத்தின் சார்பாக வெற்றி பெற்ற பா. மணிமாறன் மற்றும் இணையர் ஜோடி அடுத்த மாதம் (அக்டோபர்) 21, 22, 23 தேதிகளில் திருச்சியில் மாநில அளவில் நடைபெறும் கேரம் விளையாட்டு போட்டியில் சென்னையின் சார்பாக கலந்து கொள்ள தேர்வு செய்யப் பட்டார்கள்.

# 8 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா!

### அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பங்கேற்பு!

நாமக்கல், செப். 23-

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மூலப்பள்ளிப்பட்டி, ஈஸ்வரமூர்த்திபாளையம், திம்ம நாயக்கன்பட்டி, மத்துருட்டு, மங்களபுரம், ஆயில்பட்டி மற்றும் கார்கூடல்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ரூ.5.26 கோடி 8 புதிய திட்டப்பணி களுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் 2 குடிநீர் சுத்தி கரிப்பு நிலையங்களை திறந்து வைத்தார்.

வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் இராசிபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், இராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மூலப்பள்ளிப்பட்டி மற்றும் திம்மநாயக்கன்பட்டி ஊராட்சிகளில் தலா ரூ.8.00 இலட்சம் என மொத்தம் ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மேற்கூரை அமைப்புடன் கூடிய 22 எதிர் சவ்வூடு பரவல் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், நாமகிரிப்பேட்டை கழகச் செயலாளருமான கே.பி.இராமசுவாமி மற்றும் ஊராட்சி தலைவர்கள், கழக தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து, இராசிபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், மூலப்பள்ளிப்பட்டி ஊராட்சியில் ரூ.9.16 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கு மாதா கோயில் முதல் பசிரிமலை சாலை வரை 130 மீ நீளம், 4.5 மீ அகலத்திற்கு சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல், ரூ.9.16 இலட்சம் மதிப்பீட்டில் மாதா கோயில் அருகில் சிறுபாலம் அமைக்கும் பணி, ஈஸ்வரமூர்த்தி பாளையம் ஊராட்சியில் ரூ.10.25 இலட்சம் மதிப்பீட்டில் காத்தாகவுண்டனூர் ராஜ் வீடு முதல் சின்ன தம்பி வீடு வரை 155 மீ நீளம், 4 மீ அகலத் திற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி, ரூ.7.32 இலட்சம் மதிப்பீட்டில் காத்தாகவுண்டனூர் நடுவீதி நடேசன் வீடு முதல் டி.வி ரூம் வரை 82 மீ நீளம், 4 மீ அகலத்திற்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணி, பாரத பிரதமர் சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.3.14 கோடி மதிப்பீட்டில் ஆத்தூர் மெயின் ரோடு முதல் சிங்கிலியன் கோம்பை சாலை வழி தாண்டாகவுண்டன் பாளையம் மூலக்காடு வேம்பாகவுண்டன் புதூர் வரை தார் சாலை அமைக்கும் பணி, ரூ.1.79 கோடி மதிப்பீட்டில் ஆயில்பட்டி ஊராட்சி ஊத்துப்புளிகாடு வழி ஆண்டி குட்டை சாலை வரை தார் சாலை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. எல்லிஸ் நகர் ஆரப்பாளையம் பகுதி சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி கழக செயலாளர், பி கே செந்தில், எஸ் எஸ் மாறன் தலைமையில் நடைபெற்றதில் மாநகர் மாவட்ட செயலாளர் கோ தளபதி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றிய போது எடுத்த படம் உடன் கழக நிர்வாகிகள் வ. வேலுசாமி, பெ. குழந்தைவேலு, மா. ஜெயராம், தனச்செல்வம் மா. ஒச்சு பாலு, சின்னம்மாள், மூவேந்திரன் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் சம்மட்டிபுரம் கணேசன் இளைஞரணி சௌந்தரராஜன் மற்றும் திரளான பகுதி கழக நிர்வாகிகள் கழக உறுப்பினர்கள் கழகத்தினர்கள் கலந்து கொண்டனர்.